**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC NO. 358 / 2016** |
| **Deposition of witness for** | **:** | **PW : 6** |
| **Name** | **:** | **திரு. அறிவழகன்** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **03.03.2022**

**முதல் விசாரணை :**

நான் தற்போது கிராம நிர்வாக அலுவலராக குப்பநத்தத்தில் பணிபுரிந்து வருகிறேன். 2015 ம் ஆண்டு நான் பெரியகட்டளை பகுதியில் கிராம நிர்வாக அலுவலகராக பணிபுரிந்தேன். சம்பவம் நடந்ததாக கேள்விப்பட்டேன். கடந்த 11.11.2015 ம் ஆண்டு ஒரு பெண்ணை காரில் கடத்தி வந்ததாக கேள்விப்பட்டேன். மறுநாள் 12 ம் தேதி சம்பவம் தொடர்பாக சின்னக்கட்டளை பஸ் ஸ்டாப்பில் வைத்து கண்ணன் என்பவரை கைது செய்திருப்பதாக போலிசார் மாலை சுமார் 6.30 மணிக்கு வரச்சொன்னார்கள். நான் அங்கு சென்றேன். EB ஆபிஸ் முன்பு சிகப்பு நிற மகேந்திரா கார் நின்று கொண்டு இருந்தது. பேரையூர் நெடுஞ்சாலை பகுதியில் Suzuki MaxR TN 67 A 2728 என்ற இரு சக்கர வாகனத்தை பார்த்தேன். அடுத்த நாள் காலை 13 ம் தேதி காலை 06.00 மணிக்கு சேடப்பட்டி பஸ் ஸ்டாப் அருகே காரில் கடத்திவந்த மற்றொரு பையன் பாக்கியராஜ் என்பவரை சேடபட்டி பஸ் ஸ்டாப்பில் பிடித்து வைத்திருப்பதாக போலிசார் சொன்னார்கள். அவரிடம் இது சம்பந்தமாக விசாரித்தார்கள். பாக்கியராஜ் என்பவரிடம் இருந்து ஒரு 500/- ருபாய் தாள், 100/- ருபாய் தாள் 5 எண்ணிக்கை கைப்பற்றினார்கள்.

ஆஜர் எதிரிகளில் 1வது எதிரி பெயர் கண்ணன், 2வது எதிரி தான் பாக்கியராஜ். எதிரி கண்ணனிடம் இருந்து இரண்டு 500/- தாள்கள் கைப்பற்றினார்கள். பணத்தை எதிரிகளின் சட்டைப்பையில் இருந்து எடுத்தார்கள். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சி நானும் தலையாரியும் கையொப்பம் போட்டோம். பணமும், மகேந்திரா காரும், இரு சக்கர வாகனமும் கைப்பற்றிய அத்தாட்சியில் நானும் தலையாரியும் கையொப்பம் போட்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள். வேறு எதுவும் கைப்பற்றினார்களா என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை.

**(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)**

<u>அரசு தரப்பில் கு.வி.</u>

போலிசார் விசாரணையில் 11.11.2015ம் தேதி மாலை 04.00 மணிக்கு எதிரி வீட்டிற்கு முன்புக **KL** 33 **A** 2430 என்ற மகேந்திரா சிவப்பு நிற காரை கைப்பற்றியதற்கு நானும், தலையாரியும் கையெழுத்து செய்தோம் என்றும் அந்த அத்தாட்சி **அதசாஆ.2 ஆகும்.** 12.11.2015ம் தேதி மாலை 06.30 மணிக்கு எதிரி கண்ணன் தனது பாய்கெட்டில் இருந்து ஆஜர் செய்த 500/- ரூபாய் நோட்டு இரண்டு, அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றும், அந்த அத்தாட்சி **அதசாஆ.3 ஆகும்.** அதே நாளில் இரவு எதிரி கண்ணனிடம் இருந்து **TN** 67 **A** 2728 என்ற சிவப்பு கலர் சுசிகி மோட்டர் சைக்கிள் கைப்பற்றினார்கள். அதற்கான அத்தாட்சி **அதசாஆ.4 ஆகும்.** 13.11.2015 அன்று 07.30 மணியளவில் எதிரி பாக்கியராஜ் இடம் இருந்து 500/- நோட்டு, 100 ரூபாய் நோட்டு 5 எண்ணிக்கை ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அந்த **அத்தாட்சி அதசாஆ.5 ஆகும்.** என்னிடம் காட்டப்படும் மோட்டர் பைக் போட்டோ **அசாபொ.3 ஆகும்.**

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி.</u>**

எனது பணி நேரம் 24 மணி நேரம் ஆகும். அலுவலகத்தில் movement register பராமரிக்கப்படுவதுண்டு. இந்த வழக்கிற்காக வெளியில் சென்ற விபரத்தை பதிவு செய்துள்ளேனா என்றால் காரணம் பதிவு செய்யவில்லை. சம்பவம் நடைபெற்ற அன்று நான் சம்பவ இடத்திற்கு சென்றேனா என்றால் சென்றேன். நாங்கள் அங்கு சென்றபோது வண்டி மட்டும் இருந்தது, ஆட்கள் யாரும் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக மொத்தம் 6 கையெழுத்துக்கள் போட்டேன். வெள்ளைப்பேப்பரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. டைப் செய்யப்பட்ட பேப்பரில் கையொப்பம் செய்தேன். எதிரிகளை கைது செய்த உடனே எதிரிகளின் சட்டைப்பையில் இருந்த பணத்தை உடனே கைப்பற்றிவிட்டார்கள். எதிரிகளை கைது செய்த உடனே ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதா என்றால் எதிரிகளை கைது செய்த சுமார் 1 1/2 மணி நேரம் கழித்து தயார் செய்யப்பட்டது. இந்த வழக்கு சம்பந்தமாக நான் செய்த 6 கையெழுத்துக்களும் ஆவணங்கள் தயார் செய்த உடனே ஒரே நேரத்தில் கையொப்பம் செய்தேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை